நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம், சாத்தூர்.
முன்னிலை :– திரு. சா. வரதராஜன், பி.ஏ., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.
2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 02 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**DVC 07/2025**

1.திருமதி.ஜெயலட்சுமி (வயது 25/2026),
க/பெ.மணிகண்டன்.

2.மைனர்.கதிரேசன் (வயது 12/2026)
த/பெ.மணிகண்டன்.

3.மைனர்.ஹரிஸ்மாறன் (வயது 6/2026)
த/பெ.மணிகண்டன்.

கதவு எண்.3/118,
முத்தார்பட்டி,
கோசுகுண்டு,
சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம்.
(2,3 மைனர் மனுதாரர்களுக்காக 1 ம் மனுதாரரும்
2,3 மைனர் மனுதாரர்களின் தாயாருமான
1 ம் மனுதாரர்) ...மனுதாரர்கள்

/எதிர்/

1.திரு.மணிகண்டன் (வயது 30/2026),
த/பெ.பொ.ராசு.

2.திருமதி.காந்தியம்மாள் (வயது 56/2026),
க/பெ.பொ.ராசு.

3.திருமதி.சுப்புலட்சுமி (வயது 26/2026),
க/பெ.இசக்கிமுத்து.

4.திருமதி.செல்வி (வயது 34/2026),
க/பெ.பெரியமுனியாண்டி.

கதவு எண்.3/236,
வடக்குத் தெரு,
முத்தார்பட்டி,
கோசுகுண்டு,
சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம். ...எதிர்மனுதாரர்கள்

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005 ன் பிரிவு 12 ன் கீழ் மனுதாரர் இந்த மனுவை 06.05.2025 ம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரர்கள் வழக்கறிஞர் : திரு.வளன்வினோசிங்

எதிர்மனுதாரர்கள் : ஒருதலைபட்சம் (ex–parte)



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.02 18:26:52 +0530

1. மனு சுருக்கம்

1.1. 1வது மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் 13.03.2014 அன்று திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது 1வது எதிர்மனுதாரர் மின்சாரப் பணியாளராக (Electrician) வேலை செய்து வந்தார். திருமணத்தின் போது 1வது மனுதாரரின் பெற்றோர் அவருக்கு 10 பவுன் தங்க நகைகளைச் சீதனமாகக் கொடுத்தனர். மேலும், 1வது எதிர்மனுதாரருக்கு 2 பவுன் தங்கச் சங்கிலியும், தீபாவளிப் பண்டிகையின் போது 1 பவுன் தங்க மோதிரமும் போடப்பட்டது. 1வது எதிர்மனுதாரர் எலக்ட்ரீசியன் வேலை செய்து நாள் ஒன்றுக்குச் சுமார் ரூபாய் 1,200/− வரை சம்பாதித்து வருகிறார். அவர் வேலை முடிந்து வீடு திரும்பும்போது மது அருந்திவிட்டே வருவதுடன், வீட்டில் வைத்துக் குடிப்பதற்கும் மது வாங்கி வருவது வழக்கமாகக் கொண்டுள்ளார். இதனை 1வது மனுதாரர் தட்டிக் கேட்டால், அவரை அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டி, உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் துன்புறுத்தி கொடுமைப்படுத்தி வந்துள்ளார். 1வது எதிர்மனுதாரருக்கு அனைத்து விதமான தீய பழக்கவழக்கங்களும் இருந்து வருகின்றன.

1.2. திருமணத்திற்குப் பிறகு 1வது எதிர்மனுதாரரின் இல்லத்தில் வசித்து வந்த தம்பதியினர், அதன்பின் 1வது மனுதாரரின் சொந்த ஊரான அருப்புக்கோட்டை வட்டம், ஆத்திப்பட்டி கிராமத்தில் தனி வீடு எடுத்து வசித்து வந்தனர். இவர்களுக்கு 19.12.2014 அன்று இரண்டாவது இளவர் மனுதாரரும், 23.05.2020 அன்று மூன்றாவது இளவர் மனுதாரரும் பிறந்தனர். இதற்கிடையில், எதிர்மனுதாரர்கள் 2 முதல் 4 வரை உள்ளவர்கள் 1வது மனுதாரரைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு தொடர்ந்து கொடுமைப்படுத்தி வந்தனர். அவர்கள் 1வது மனுதாரரை விவாகரத்து செய்யும்படியும், அவ்வாறு செய்தால் 1வது எதிர்மனுதாரருக்கு வேறொரு திருமணம் செய்து வைப்போம் என்றும் கூறி மிரட்டியுள்ளனர்.

1.3. மனுதாரர்களின் வாழ்வாதாரத்திற்கோ, அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கோ அல்லது கல்விச் செலவிற்கோ பணமோ, பொருளோ எதுவும் கொடுக்காமல், 1வது எதிர்மனுதாரர் தனது வருமானம் முழுவதையும் மதுபானங்கள் வாங்கவும், வீட்டில் சேமித்து வைத்துக் குடிப்பதற்கும் வீணடித்து வந்துள்ளார். எனவே, மனுதாரர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டி, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 பிரிவு 12−ன் கீழ் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். அந்த மனுவில் அவர்கள் கோரியுள்ள பரிகாரங்கள் பின்வருமாறு:

- பிரிவு 20−ன் கீழ்: 1வது மனுதாரருக்கு மாதப் பராமரிப்புத் தொகையாக ரூபாய் 7,000/−ம், இரண்டு மற்றும் மூன்றாவது இளவர் மனுதாரர்களுக்கு



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.02 18:26:59 +0530

மாதப் பராமரிப்புத் தொகையாக தலா ரூபாய் 10,000/-ம் (மொத்தம் ரூ.27,000/-) வாழ்க்கை பொருளுதவியாக வழங்க உத்தரவிட வேண்டும்.

- பிரிவு 17-ன் கீழ்: மனுதாரர்கள் வாழ்வதற்கு ஏதுவாகத் தனி அறையோ அல்லது தனி வீடோ ஏற்படுத்திக் கொடுக்க எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட வேண்டும்.
- பிரிவு 18-ன் கீழ்: 1வது மனுதாரரை எவ்வகையிலும் எதிர்மனுதாரர்கள் துன்புறுத்தக் கூடாது எனப் பாதுகாப்பு உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.
- பிரிவு 22-ன் கீழ்: எதிர்மனுதாரர்கள் இழைத்த கொடுமைகளுக்கு இழப்பீடாக ரூபாய் 10,00,000/- (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) தொகையைச் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ வழங்க உத்தரவிட வேண்டும்.
- பிரிவு 20(1)(c)-ன் கீழ்: 1வது மனுதாரரின் 2 பவுன் தங்க நகையைத் திருப்பிச் செலுத்த உத்தரவிட வேண்டும்.

2. வழக்கு விசாரணை மற்றும் சாட்சியங்கள்:

2.1. இந்த மனு குறித்து எதிர்மனுதாரர்களுக்கு உரிய முறையில் நீதிமன்ற அறிவிப்பு அனுப்பப்பட்டு, அது சார்பு செய்யப்பட்டது. எனினும், எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியதால், அவர்கள் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டனர் (Set Ex-parte).

2.2. மனுதாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக, 1வது மனுதாரர் தனது நிரூபண வாக்குமூலத்தைத் தாக்கல் செய்து, தன் தரப்பில் 7 சான்றாவணங்களைக் குறியீடு செய்துள்ளார். அதாவது, 1வது மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமண அழைப்பிதழ், இரண்டு மற்றும் மூன்றாவது இளவர் மனுதாரர்களின் பிறப்புச் சான்றிதழ்கள், 1வது மனுதாரரின் குடும்ப அடையாள அட்டை, இரண்டு இளவரின் ஆதார் அடையாள அட்டை மற்றும் 1வது மனுதாரர் மற்றும் 1வது எதிர்மனுதாரர் இணைந்து எடுத்துக் கொண்ட திருமணப் புகைப்படம் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

3. பரிசீலனை மற்றும் நீதிமன்றத்தின் முடிவு:

3.1. மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்குக் கிடைக்கத்தக்கதா? என்பதே இந்நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டிய முக்கியப் பிரச்சனையாகும்.

3.2. மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன; வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டன.

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.02 18:27:03 +0530

3.3. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருமணப் பத்திரிகை, திருமணப் புகைப்படம் மற்றும் அடையாள அட்டைகளின் வாயிலாக, 1வது மனுதாரருக்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது என்பதும், அதன் பயனாக இரண்டு மற்றும் மூன்றாவது இளவர் மனுதாரர்கள் பிறந்துள்ளனர் என்பதும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகிறது. இந்த உறவுமுறையை ஆட்சேபிக்கவோ அல்லது மறுக்கவோ எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்திற்கு வரவில்லை.

3.4. மேலும், 1வது மனுதாரரை எதிர்மனுதாரர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வன்கொடுமைக்கு உள்ளாக்கினார் என்ற குற்றச்சாட்டை மறுப்பதற்கு எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எனவே, மனுதாரர்கள் தரப்பு வழக்கு எவ்வித மறுப்பும் இன்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. 1வது மனுதாரரை 1வது எதிர்மனுதாரர் கொடுமைப்படுத்தினார் என்ற வாதத்தை மறுப்பதற்கு எதிர் வாதமோ, சான்றுகளோ இல்லாத சூழ்நிலையில், மனுதாரர்களின் இந்த வழக்கை மறுக்க இந்நீதிமன்றத்திற்கு வேறு காரணங்கள் எதுவும் இல்லை.

3.5. அதே வேளையில், மனுதாரர்கள் தங்களது மனுவில் எந்தக் காலத்திலும் எதிர்மனுதாரர்கள் 2 முதல் 4 ஆகியோருடன் ஒரே கூரையின் கீழ் (Shared Household) இணைந்து வசித்து வந்ததாகக் குறிப்பிடவில்லை. எனவே, எதிர்மனுதாரர்கள் 2 முதல் 4 வரை உள்ளவர்களுக்கு எதிரான இந்த மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

3.6. இருப்பினும், 1வது எதிர்மனுதாரர், 1வது மனுதாரருக்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வன்கொடுமை இழைத்துள்ளார் என்பதற்குப் போதுமான சான்றுகள் உள்ளதால், அவருக்கு எதிரான இந்த மனு சட்டப்படி முழுமையாக நிலைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

3.7. 1வது மனுதாரரின் இரண்டு பவுன் நகை, 1வது எதிர்மனுதாரிடம் இருக்கிறது என்று தனது மனுவில் தெளிவாகக் குறிப்பிட்டு எதுவும் கூறாத நிலையில், அது தொடர்பாகக் கோரப்பட்டுள்ள பரிகாரமானது நிலைக்கத்தக்கதல்ல.

3.8. 1வது எதிர்மனுதாரர் மாதம் ரூபாய் 45,000/- சம்பாதித்து வருவதாக மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டபோதிலும், அது தொடர்பான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அதேபோன்று, 1வது எதிர்மனுதாருக்கு வேறு வருமானங்கள் இருப்பதைக் காண்பிப்பதற்கும் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், மனுதாரர்கள் கோரியுள்ள செலவுத்தொகையானது அவர்களுக்கு மாதாந்திரம் ஏற்படக்கூடிய நியாயமான செலவுகள்தான் என்பதனை



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.02 18:27:08 +0530

நிரூபிப்பதற்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும், 1வது மனுதாரர் தனது இரண்டு இளவர் மனுதாரர்களைப் பராமரித்து, வளர்த்து ஜீவனம் செய்வதற்கு குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ரூபாய் 6,000/- வரை தேவைப்படும் என்பதனை இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. அத்தொகையை 1வது எதிர்மனுதாரர், 1வது மனுதாரருக்கு மாதாந்திர வாழ்க்கை பொருளுதவியாகச் செலுத்த உத்தரவிடுவதே நீதியின்பால் சரியானதாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

3.9. அதேபோல், வீட்டு வாடகைத் தொகையாக மாதம் ரூபாய் 1,500/- செலுத்த உத்தரவிடுவதும் நீதியின்பால் சரியானதாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

3.10. மேலும், 1வது மனுதாரருக்கு, 1வது எதிர்மனுதாரர் இழைத்துள்ள குடும்ப வன்முறைக்கு இழப்பீடாக ரூபாய் 25,000/- செலுத்த உத்தரவிடுவதும் நீதியின்பால் சரியானதாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

4. மேலே பரிசீலனை செய்யப்பட்ட இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில், இந்த மனுவானது கீழ்க்கண்டவாறு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது:

5. உத்தரவு (Order):

5.1. வாழ்க்கைப் பொருளுதவி (Maintenance): 1வது எதிர்மனுதாரர், மனுதாரர்களின் மாதாந்திர வாழ்க்கை பொருளுதவிக்காக (பராமரிப்புத் தொகை) மொத்தம் ரூபாய் 6,000/-ஐ (ஆறாயிரம் மட்டும்), இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியான **17.04.2025** முதல் கணக்கிட்டுச் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

5.2. நிலுவைத் தொகை (Arrears): இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து இன்று வரை செலுத்த வேண்டிய பாக்கியத் தொகையை, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இன்றைய தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

5.3. வீட்டு வாடகை (House Rent): இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து, ஒவ்வொரு ஆங்கில மாதமும் 10-ஆம் தேதிக்குள் மனுதாரர்கள் குடியிருப்பதற்கு ஏதுவாக வீட்டு வாடகைத் தொகையாக ரூபாய் 1,500/- (ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) ஐ 1வது எதிர்மனுதாரர், 1வது மனுதாரருக்குச் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

5.4. மாதாந்திரச் செலுத்துகை முறை (Mode of Payment): ஒவ்வொரு மாதமும் மாதாந்திர வாழ்க்கை பொருளுதவித் தொகை (ரூ. 6,000/-) மற்றும் வீட்டு வாடகைத்



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.06.02 18:27:11 +0530

தொகை (ரூ. 1,500/-) ஆகியவற்றைச் சேர்த்து மொத்தம் ரூபாய் 7,500/- (ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) ஐ, 1 வது மனுதாரரின் வங்கிக் கணக்கில் நேரடியாக ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 10-ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

5.5. இழப்பீடு (Compensation): 1 வது மனுதாரருக்கு 1 வது எதிர்மனுதாரர் குடும்ப வன்முறைச் சட்டம் பிரிவு 22-இன் கீழ் இழப்பீடாக ரூபாய் 25,000/- (இருபத்தைந்தாயிரம் மட்டும்) ஐ, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

5.6. வழக்குச் செலவு (Costs): இவ்வழக்கில் செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 02 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.02 18:27:16 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
சாத்தூர்.

**பின் இணைப்பு**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**

ம.சா.1 – ஜெயலட்சுமி

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | ஆவணம் |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 13.03.2014 | 1 ம் மனுதாரருக்கும் எதிர் மனுதாரருக்கும் நடைபெற்ற திருமண அழைப்பிதழ் – அசல் |
| ம.சா.ஆ.2 | – | 1 ம் மனுதாரர் மற்றும் எதிரி மனுதாரர் திருமணத்தின்போது எடுத்துகொண்ட புகைப்படம் – அசல் |
| ம.சா.ஆ.3 | 19.12.2014 | 2 ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் – நகல் |
| ம.சா.ஆ.4 | 23.05.2020 | 3 ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் – நகல் |
| ம.சா.ஆ.5 | – | 1 ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.6 | – | 2 ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை – நகல் |
| ம.சா.ஆ.7 | – | 1 ம் மனுதாரரின் குடும்ப அடையாள அட்டை – நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்** – இல்லை

S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.06.02 18:27:20 +0530

நீதித்துறை நடுவர் எண்.2 சாத்தூர்.